வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : செங்கேணி பழனி

தேதி 10.02.2026 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

சத்தீஸ்கரில் நடைபெற்ற, பஸ்தர் பந்தம் திருவிழா, பஸ்தாரின் வளமான கலாச்சாரம், மற்றும், பழங்குடி பாரம்பரியத்தை அற்புதமான முறையில் வெளிப்படுத்தியதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2026-27ஆம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட் மீதான விவாதம், இன்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மீண்டும் தொடங்கியது.

எதிர்கட்சி உறுப்பினர்கள், மக்களவை நடவடிக்கைகளை சீர்குலைப்பதாக, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ குற்றம்சாட்டியுள்ளார்.

புதுச்சேரியில், வரும் 12ஆம் தேதி தொடங்க உள்ள புதுச்சேரி திரைப்பட விழாவிற்கான லோகோவை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று வெளியிட்டார்.

---

*மோடி-திருவிழா (17)*

சத்தீஸ்கரில் நடைபெற்ற, பஸ்தர் பந்தம் திருவிழா, பஸ்தரின் வளமான கலாச்சாரம், மரபுகள், மற்றும், பழங்குடி பாரம்பரியத்தை அற்புதமான முறையில் வெளிப்படுத்தியதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இதுகுறித்து சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ள அவர், சத்தீஸ்கர் மாநிலத்தின் பஸ்தர் பெயர் குறிப்பிடப்படும் போதெல்லாம், மாவோயிசம், வன்முறை, மற்றும், வளர்ச்சியில் பின்தங்கிய

நிலை ஆகியவையே, நினைவுக்கு வந்த நிலை தற்போது மாறி விட்டதாக, தெரிவித்துள்ளார். இப்போது இந்நகரம், வளர்ச்சிக்கும், உள்ளூர் மக்களின் வளர்ந்து வரும் தன்னம்பிக்கைக்கும், பெயர் பெற்று திகழ்வதாக, குறிப்பிட்டுள்ளார். இம்மாதம் 7ஆம் தேதி முதல், நேற்று வரை, பஸ்தர் பந்தம் திருவிழா, சத்தீஸ்கரில் நடைபெற்றது. இந்தியாவின் கலாச்சார-பாரம்பரியத்தை பாதுகாப்பதிலும், உள்ளூர் சமூகங்களை மேம்படுத்துவதிலும், இதுபோன்ற நிகழ்வுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்று பிரதமர் தெரிவித்துள்ளார். இத்திருவிழாவில் பங்கேற்ற அனைத்து மக்களுக்கும் அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார். பஸ்தரின் வரவிருக்கும் காலம் அமைதி, முன்னேற்றம், மற்றும், கலாச்சார பெருமையின் உணர்வால் நிரப்பப்படும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

--------------------------------

*நாடாளுமன்றம் (16)*

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், எதிர்கட்சிகள் பல்வேறு பிரச்சனைகளை எழுப்பி அமளியில் ஈடுபட்டனர். இன்று காலை மக்களவை கூடியதும், அவை நடத்தும் அலுவலர் திரு. பி.சி மோகன், கேள்வி நேரத்தை எடுத்துக் கொள்ள முற்படுகையில், காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சி உறுப்பினர்கள், அவையின் மையப் பகுதியில் கூடி கோஷங்களை எழுப்பினர். இதனையடுத்து அவை நண்பகல் 12 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. அமைச்சர்கள், தங்கள் துறை சார்ந்த செயல்பாடுகள் குறித்த அறிக்கையை சமர்ப்பித்தனர். அதனை தொடர்ந்து, 2026-27ஆம் நிதியாண்டிற்கான பட்ஜெட் மீதான விவாதத்தை நடத்துவதற்கு முற்பட்ட போது, எதிர்கட்சியினர் கோரிக்கைகளை வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டனர். அப்போது குறுக்கிட்ட அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, நாடாளுமன்றத்தின் மதிப்புமிக்க நேரம், எதிர்கட்சிகளின் செயலால் வீணாவதாகவும், அவை நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற ஒத்துழைக்க வேண்டும் என

கேட்டுக் கொண்டார். ஆனால் எதிர்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

*நாடாளுமன்றம் 2 (4)*

இதற்கிடையே, மக்களவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா மீது, நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர, எதிர்கட்சிகள் மக்களவை பொது செயலாளரிடம் நோட்டீஸ் அளித்துள்ளன. இந்த நோட்டீஸ் ஆய்வு செய்யப்பட்டு விதிகளின் படி செயல்படுத்தப்படும் என்று, மக்களவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

--------------------------------

*கீர்த்தி வர்தன் சிங்* 1 (4)

வனப் பகுதிகளில் வாழும் மக்கள், விலங்குகளின் நடமாட்டம் குறித்து விழிப்புடன் இருப்பதற்கு, மாநில அரசுகள், நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

*கீர்த்தி வர்தன் சிங்* 2 (13)

(வாய்ஸ்)

இன்று மக்களவையில், இதுகுறித்து எழுத்துமூலமாக அவர் அளித்த பதிலில், மனித உயிர்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் வன விலங்குகள் தொடர்பான முழு விவரங்களும், சம்பந்தப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும், அடிக்கடி குடியிருப்புப் பகுதிகளில், மக்களை தாக்கும் வனவிலங்குகளை பிடிப்பதற்கு, மாநில வனப் பாதுகாவலர்களுக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளதாகவும் திரு. கீர்த்தி வர்தன் சிங், தெரிவித்துள்ளார். வனவிலங்குகளை பாதுகாக்கும் வகையில், தேசிய பூங்கா, சமூக வனவிலங்குகள் பூங்கா போன்றவை சம்பந்தப்பட்ட பகுதிகளில் அமைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மேலும், யானை, புலி, காட்டுப் பன்றி உள்ளிட்ட

வனவிலங்குகளிடம் இருந்து, மனிதர்களை பாதுகாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகவும், மத்திய இணையமைச்சர் தமது எழுத்துபூர்வமான பதிலில் தெரிவித்துள்ளார்.

---------------------------------

*பட்ஜெட் விவாதம் (17)*

2026-27ஆம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட் மீதான விவாதம், இன்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மீண்டும் தொடங்கியது. மாநிலங்களவையில் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று பேசிய சிவசேனா உறுப்பினர் திரு. மிலிந்த் தியோரா, அரசியல் மற்றும் பொருளதார ரீதியாக காணப்படும் கொந்தளிப்பான இந்த நேரத்தில், இந்தியா ஒரு அறிய பொருளாதார வளர்ச்சி, மற்றும், நீடித்த, நிலையான தன்மை கொண்ட நாடாக தனித்து நிற்கிறது என்றார். இந்த பட்ஜெட் ஏழைகளின் நலனை மையமாக கொண்டதாக இல்லை என்று, திமுக உறுப்பினர் திருமதி. கனிமொழி, திரு. என்.வி.என். சோமு ஆகியோர் குற்றம்சாட்டினர். மேலும், நாட்டின் பொருளாதார யதார்த்தங்களில் இருந்து, இந்த பட்ஜெட் விலகி இருப்பதாகவும் தெரிவித்தனர். பிஜேபி உறுப்பினர் திரு. சுரேந்திர சிங் நாகர் கூறுகையில், இந்த பட்ஜெட், பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அதிகரிப்பதற்கும், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கும் முன்னுரிமை அளிக்கிறது என்று குறிப்பிட்டார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. நீரஜ் டாங்கி பேசும்போது, விவசாயிகள், தொழிலாளர்கள், இளைஞர்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின் எதிர்பார்ப்புகளை இந்த பட்ஜெட் நிறைவேற்றவிலை என்று தெரிவித்தார்.

---------------------------------

*கிரண் ரிஜிஜூ (15)*

எதிர்கட்சி உறுப்பினர்கள், மக்களவை நடவடிக்கைகளை சீர்குலைப்பதாக, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ குற்றம்சாட்டியுள்ளார். அவர்களின் செயல்கள்

மக்களவையின் கண்ணியத்திற்கு அவர்கள் எந்தவித மரியாதையும் காட்டவில்லை என்பதை உணர்த்துவதாக, ஊடகங்களிடம் பேசிய போது திரு. கிரண் ரிஜிஜூ தெரிவித்தார். காங்கிரஸ் பெண் உறுப்பினர்கள், கடந்த வாரம் அவையில், பிரதமர் இருக்கைக்கு அருகில் சென்றதாகவும், இது வெட்கக் கேடான செயல் என்றும் தெரிவித்தார். பிஜேபி பெண் உறுப்பினர்கள், காங்கிரஸ் உறுப்பினர்களின் நடத்தைக்கு எதிராக, மக்களவை தலைவரிடம் கடுமையான புகார் அளித்துள்ளதாகவும் திரு. ரிஜிஜூ குறிப்பிட்டார். காங்கிரசார் தங்கள் சமூக ஊடக கணக்குகளில், இதை கொண்டாடும் விதமாக பதிவிடுவதும், பெண் எம்.பிக்கள், பிரதமரை பயமுறுத்தியதாக கூறுவதாகவும், அவர் குற்றம் சாட்டினார். இது, காங்கிரஸ் உறுப்பினர்களின் வெட்கக் கேடான செயல் என்றும், நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும், திரு. கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

--------------------------------

*புதுச்சேரி திரைப்பட விழா* 1 (8)

புதுச்சேரியில், வரும் 12ஆம் தேதி தொடங்கி, 4 நாட்கள் நடைபெற உள்ள புதுச்சேரி திரைப்பட விழாவிற்கான லோகோவை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று சட்டப் பேரவை வளாகத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ.பி. ரமேஷ், மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன், அரசு செயலர் திரு. முகமது அசன் அபித் ஆகியோரும் கலந்து கொண்டனர். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

*புதுச்சேரி திரைப்பட விழா* 2 (10)

(வாய்ஸ்)

<u>புதுச்சேரி அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறையால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள புதுச்சேரி திரைப்பட விழா, நாளை மறுநாள் தொடங்கி,</u>

15ஆம் தேதி வரை 4 நாட்களுக்கு நடைபெறுகிறது. இவ்விழாவில், இந்திய பனோரமா, சர்வதேச மற்றும், குழந்தைகளுக்கான திரைப்படங்கள், ஆவணப் படங்கள் ஆகிய பிரிவுகளில், 46 படங்கள் திரையிடப்பட உள்ளன. கருவடிக்குப்பத்தில் உள்ள காமராஜர் மணிமண்டபம், சுய்ப்ரேன் வீதியில் அமைந்துள்ள அலையான்ஸ் பிரான்சேஸ், லாஸ்பேட்டில் உள்ள டாக்டர் ஏபிஜே அறிவியல் மையம் மற்றும் கோளரங்கம், கடற்கரை சாலையில் உள்ள காந்தித் திடல் ஆகிய இடங்களில், ஒரே நேரத்தில், படங்கள் திரையிடப்பட உள்ளன.

---------------------------------

*காரைக்கால் குடற்புழு மாத்திரை (9)*

காரைக்காலில், 1 முதல் 19 வயது வரையுள்ள 52 ஆயிரத்து 600 மாணவ-மாணவிகளுக்கு, குடற்புழு நீக்கும் மாத்திரை வழங்கும் பணி, இன்று தொடங்கி உள்ளது. தலத்தெரு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், காரைக்கால் மாவட்ட துணை ஆட்சியர் செல்வி பூஜா கலந்து கொண்டு, மாணவர்களுக்கு குடற்புழு மாத்திரை வழங்கும் பணிகளை தொடக்கி வைத்தார். ரத்தசோகை, மற்றும், ஊட்டச்சத்து குறைபாட்டை தடுக்கும் வகையில் இம்மாத்திரை வழங்கப் படுவதாக, நலவழித் துறை துணை இயக்குநர் டாக்டர் சிவராஜ் குமார் இந்நிகழ்ச்சியில் தெரிவித்தார்.

---------------------------------

*காரைக்கால் என்ஐடி (8)*

காரைக்கால் திருவெட்டக்குடியில் உள்ள தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெறும் இந்திய செயற்கை நுண்ணறிவு தாக்கம் குறித்த 2026 மாநாட்டின் முன்நிகழ்வாக, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான சிறப்பு பயிலரங்கம் இன்று நடைபெற்றது. இப்பயிலரங்களில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் நெறிமுறைகள், மற்றும், அவற்றின் பயன்பாடு குறித்து, மாணவர்களுக்கு விழிப்புணர்வுவை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு தகவல்கள் வழங்கப்பட்டன. இப்பயிலரங்கில், என்ஐடி

புதுச்சேரி பதிவாளர் முனைவர் சுந்தரவரதன், கலந்து கொண்டு சிறப்பித்தார்.

--------------------------------

*ஏனாம் வீடு* (10)

ஏனாமில் நடைபெற்ற, பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு, மானியத் தொகை வழங்கும் நிகழ்ச்சியில், ஏனாம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கொல்லப்பள்ளி ஸ்ரீனிவாஸ் அசோக் கலந்து கொண்டு, 124 பயனாளிகளுக்கு, மானியத் தொகைக்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மண்டல நிர்வாகி திரு. அங்கித் குமார், புதுச்சேரி குடிசை மாற்று வாரியத்தின் இளநிலை பொறியாளர் திரு. பாஸ்கரன் ஆகியோரும் பங்கேற்றனர். அதனை தொடர்ந்து ஜோதிபாய் புலே அரசு விடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 34 முடிவெட்டும் தொழிலாளர்களுக்கு, அவர்கள் தொழில் செய்வதற்கான உபகரணங்களை, சட்டமன்ற உறுப்பினர் திரு. கொல்லப்பள்ளி ஸ்ரீனிவாஸ் வழங்கினார்.

--------------------------------

*வானிலை* (6)

தமிழ்நாடு, புதுச்சேரி, மற்றும், காரைக்கால் பகுதிகளில், அடுத்த 2 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சேலம், ஈரோடு மாவட்டங்களின் ஒருசில இடங்களில், அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

--------------------------------

*பிரதமர்-கிசான்* (12)

பிரதமர் கிசான் திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து, இதுவரை 4 லட்சம் கோடிக்கு மேல், விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கப் பட்டுள்ளதாக, மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையமைச்சர் திரு. ராம்நாத் தாக்கூர் தெரிவித்துள்ளார். இன்று

மக்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அவர் அளித்த பதிலில், விவசாயிகளின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடியால், 2019ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்ட பிஎம். கிசான் திட்டம், ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதிப் பலன், 3 தவணைகளில் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதாக தெரிவித்தார். நாடு முழுவதும் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இந்த திட்டத்தின் பலன்கள், இடை தரகர்கள் தலையீடு இல்லாமல் சென்றடைவதை, டிஜிட்டல் உள்கட்டமைப்பு உறுதி செய்வதாக கூறினார்.

--------------------------------

*சுரேஷ் கோபி (9)*

சமுத்ர மந்தன் திட்டத்தின் கீழ், ஹைட்ரோ கார்பன் வளங்களை கண்டறிய, அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக, மத்திய பெட்ரோலியத் துறை இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி, கூறியுள்ளார். மாநிலங்களவையில், இது தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர், மகாநதி, மற்றும், காவிரி ஆற்றுப்படுகையில் இதுகுறித்த ஆராய்ச்சிளக் நடத்தப்பட்டதில், ஹைட்ரோ கார்பன் கண்டறியப்பட்டதாக தெரிவித்தார். தேசிய ஆழ்கடல் திட்டத்தின் கீழ், ஹைட்ரோ கார்பன் வளங்கள் குறித்து கண்டறிய, சமுத்ர மந்தன் திட்டம் கடந்த ஆண்டு தொடங்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

--------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

சத்தீஸ்கரில் நடைபெற்ற, பஸ்தர் பந்தம் திருவிழா, பஸ்தரின் வளமான கலாச்சாரம், மற்றும், பழங்குடி பாரம்பரியத்தை அற்புதமான முறையில் வெளிப்படுத்தியதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2026-27ஆம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட் மீதான விவாதம், இன்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மீண்டும் தொடங்கியது.

எதிர்கட்சி உறுப்பினர்கள், மக்களவை நடவடிக்கைகளை சீர்குலைப்பதாக, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ குற்றம்சாட்டியுள்ளார்.

புதுச்சேரியில், வரும் 12ஆம் தேதி தொடங்க உள்ள புதுச்சேரி திரைப்பட விழாவிற்கான லோகோவை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று வெளியிட்டார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது